மண்முனை மேற்கு பிரதேச சபை
மட்டக்களப்பு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 22 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் மண்முனை மேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செலவுக் கடன் வழங்குனரில் பொறுப்பாகக் காட்டுவதாயின் குறித்த பொருள் அல்லது சேவை நுகரப்பட்டிருத்தல் அல்லது வேலை முடிவடைந்திருத்தல் வேண்டும். ஆனால் சபைக்குச் சொந்தமான ஒரு வங்கி இயங்கும் கட்டிடத்தின் விஸ்தரிப்பு ஆரம்பிக்கப்படாமலேயே ரூபா 2,200,350 தொகை செலவுக் கடன் வழங்குனராக வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | பொருள் அல்லது சேவை நுகரப்பட்ட பின்னரே செலவுக் கடன் வழங்குனரில் காட்டுதல் வேண்டும். | தற்போது குறித்த வங்கி இயங்கும் கட்டடத்தின் விஸ்தரிப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இது சீர்செய்யப்படும். |
| (ஆ) மீளாய்வாண்டில் சபையானது கணக்கறிக்கையில் சில்லறைக் கடன்கொடுத்தோர் என ஏற்பாடு செய்யும் தொகைக்கு தனியான கணக்கு பேணாமல் வைப்புக் கணக்கினூடாக ரூபா 2,528,195 தொகையைக் காட்டுவதனால் | சில்லறைக் கடன் கொடுனர் கணக்கில் காட்டுதல் வேண்டும். | சில்லறைக் கடன்கொடுத்தோரை தனியான கணக்கில் பேணாமல் வைப்புக்கணக்கில் காட்டுவதற்கு காரணம் போதிய விளக்கமின்மையே ஆகும். தற்போது தனியான கணக்கு பேண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| வைப்புக்கணக்கு அத்தொகையினால் அதிகரித்துக் காணப்பட்டது. | | |
| (இ) பிரதேச சபையினால் மீளாய்வாண்டின் ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான காலப்பகுதிக்கான மாகாண திறைசேரி திணைக்களத்திடமிருந்து ஆதனங்களை கைமாற்றல், சீதனம் மற்றும் நன்கொடைகள் மீது அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வையானது ரூபா 3,389,400 தொகையாக கணிக்கப்பட்டுள்ள போதிலும், அத்தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு எண்ணக்கருவின் அடிப்படையில் அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். | இதுவரை காலமும் சபையினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முத்திரைத் தீர்வையானது நிலுவையாகக் காட்டப்படவில்லை. 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் இது நிலுவையாகக் காட்டப்படும். |
| (ஈ) பிரதேச சபையினால் மீளாய்வாண்டில் 2017 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வையானது ரூபா 3,826,239 தொகையில் கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கென அறவிடப்பட்ட 1% சதவீதமான ரூபா 38,262 தொகை, மட்டக்களப்பு மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய ரூபா 66,900 தொகை என்பவை செலுத்தப்பட்டதாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கிடைத்த வருமானத்தில் செலுத்திய செலவுகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டுக்குரிய முத்திரைத்தீர்வையில் அறவிடப்பட்ட நிர்வாகச் செலவு, மாவட்ட உதவிக் காணிப்பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய தொகை இதுவரை காலமும் கணக்கில் காட்டப்படாமல் உள்ளது. காரணம் மேலே குறிப்பிட்ட தொகைகள் கழிக்கப்பட்ட மிகுதி தொகையே எமக்கு வழங்கப்படுகின்றது. இவ்வாண்டில் இவை கணக்கில் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (உ) மீளாய்வாண்டில் தெருவிளக்குகள் கொள்வனவு ரூபா 1,380,075 மற்றும் வாகனங்களுக்கான ரயர் கொள்வனவு ரூபா 544,200 என்பன ஒரு வருமானச் செலவாகும். ஆனால் இத்தொகை மூலதனச் செலவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வருமானச் செலவாகப் பதியப்பட்டிருத்தல் வேண்டும். | வருமானச் செலவில் ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் மூலதனச் செலவாக காட்டப்பட்டிருந்தது. இனிவரும் காலங்களில் சீர் செய்யப்படும். |

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,873,377 தொகை செலவுக்கடன் வழங்குனரில் காணப்படுவதை இதுவரை காலமும் சீர்செய்யப்படாது செலவுக் கடன் வழங்குனரில்காட்டப்பட்டு வருகின்றது. | செலவுக்கடன் வழங்குனரில் காட்டுவதாயின் அது ஒரு வருட காலப்பகுதியில் சீராக்கம் செய்யப்படுதல் வேண்டும். | செலவுக்கடன் வழங்குனர் தொகை ரூபா.1,873,377.00 சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை</u>

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 41(2) | மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அமைச்சின் செயலாளரது அனுமதி பெறப்படவேண்டியிருந்தும் அவ் அனுமதி பெறப்படாது DAF 8438 வாகனக் கொள்வனவு இடம்பெற்றிருந்தது. | அமைச்சின் செயலாளரது அனுமதி பெறப்படவேண்டும். | கௌரவ மாகாண சபை உறுப்பினர் துரைரெட்ணம் அவர்கள் 1,000,000.00 நிதி ஒதுக்கீடு வழங்கியிருந்தார். முன்னாள் செயலாளர் காலத்தில் உள்ளூராட்சி ஆணையாளர்,உள்ளூராட்சிஉதவிஆணையாளர் அனுமதியுடன் இவ்வாகனக் கொள்வனவு இடம்பெற்றுள்ளது. இது போன்ற நடவடிக்கைகள் எதிர்காலத்தில் சரியாக நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும். |
| (ஆ) நிதி அமைச்சின் 2016 மார்ச் 17 திகதிய வரவு செலவுத்திட்ட சுற்று நிருப இல 1/2016 இன் பிரிவு 5.2 | கப் வாகனங்கள் முறையான கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நிதி ஏற்பாடுகளின் கிடைப்பனவுக்கு அமைவாக அரசாங்க | முன்னங்கீகாரம் பெறப்பட்டிருத்தல் வேண்டும். | முன்னாள் செயலாளர் காலத்தில் உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அனுமதியுடன் இவ்வாகனக் கொள்வனவு இடம்பெற்றுள்ளது. இது |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்பட முடியும். அத்துடன் முன் அங்கீகாரம் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு உரிய திறைசேரி திணைக்களங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். | | போன்ற நடவடிக்கைகள் எதிர்காலத்தில் சரியாக நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும். |
| (இ) 2006 ஆம் ஆண்டு அரச பெறுகை வழிகாட்டி 018 யூலை 09 ஆம் திகதி வெளியிடப்பட்ட 34 ஆவது பிற்சேர்க்கையின் 2.14.1 பிரிவு | ரூபா 200,000 தொகைக்கு மேற்பட்ட வாகன திருத்தச் செலவு தொடர்பான முன் அனுமதியினை அமைச்சின் செயலாளரிடமிருந்து பெறவேண்டியிருந்த போதிலும் இதற்கு மாறாக சபையினால் 53-8521 பிக்கப் வாகனம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | அமைச்சின் செயலாளரிடமிருந்து முன்னனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். | ரூபா.200,000.00 க்கு மேற்பட்ட வாகனத்திருத்த செலவு தொடர்பாக அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறுவதற்கு பதிலாக சபை அனுமதி, உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் போன்றோரின் அனுமதி மற்றும் இயந்திரப் பொறியியலாளர் அறிக்கை பெற்று பிக்கப் வாகனம்(53-6521) திருத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரியான நிதி நடைமுறைகள் பின்பற்றப்படும் |
| (ஈ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிர்வாக சுற்றறிக்கை 09/2009 இன் IV ஆம் பிரிவு | விடுமுறை தினக் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் போது நேரத்தை அடிப்படையாகக் கொள்வதாயின் அந்நேரத்தை விரலடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும் | விரலடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். | விடுமுறை தினக் கொடுப்பனவு வழங்கும்போது வரவுப்பதிவேட்டில் அலுவலகத்திற்கு வரும் நேரம், செல்லும் நேரம் என்பன உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடுமுறை தினக்கொடுப்பனவுகள் வழங்கும்போது விரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட்டுள்ள து. |
| (உ) கிழக்கு மாகாண 2018 யூன் 04 ஆம் திகதிய மாகாண நிதிச் சுற்றறிக்கை இல PT/04(2)/2018 பந்தி 7.1 | ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட பொருள் கொள்வனவுக்கான தீர்மானமானது பிராந்திய பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளாமல் அதற்கு மாறாக பெறுகைக் குழுவினதும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் சிபார்சு இன்றி DAF 8438 இலக்க வாகன கொள்வனவுக்காக வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். | ngWiff; FOtpdJk; njhopEl;g kjpg;gPl;Lf; FOtpdJk; rpghh;Rld; nfhs;tdT Nkw;nfhs;sg;gl; bUj;jy; Ntz;Lk;. | உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அனுமதியுடனும் பதிவு செய்யப்பட்ட தனியார் கம்பனி என்ற அடிப்படையில் நேரடியாக முன்னாள் செயலாளர் அவர்களால் DAF 8438 இலக்க வாகனம் கொள்வனவுக்காக வழங்குனர் தெரிவு இடம்பெற்றுள்ளது. இனிவரும் காலங்களில் நிதிச்சுற்றறிக்கைகளை பின்பற்றி சரியான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------------- | ---------------------------------------------- | ------------------------------------------------- |
| கடந்த மற்றும் மீளாய்வாண்டில் செய்து முடிக்கப்பட்ட ஐந்து ஒப்பந்த வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 740,586 தொகை பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், அவ்வழங்குனர்களிடமிருந்து “வற் பற்றுச்சீட்டு” (VAT Invoice) பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டி 5.4.11 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் வரிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். | கடந்த மற்றும் மீளாய்வாண்டில் செய்யப்பட்ட ஒப்பந்த வேலைகளுக்காக ஒப்பந்த காரர்களுக்கு வழங்கப்பட்டபெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா.740,586.00 வற் பற்றுச்சீட்டு இன்றி வழங்கப்பட்டதற்கு காரணம் போதிய விளக்கமின்மையே ஆகும். இனிவரும் காலங்களில் இவை சரியாக மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

2. நிதிசார் மீளாய்வு

---------------------------

2.1 நிதிசார் விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,190,480 ஆக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,728,470 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,537,990 பின்னடைவைக் காட்டுகின்றது.3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

--------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (I) சபையினால் ஆதனங்கள் குத்தகைக்கு வழங்கப்படும் போது பிணை பெறப்படாது ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இதனால், குத்தகைக்கு சொத்துக்களை பெற்றவர்கள் குத்தகைப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் சபையானது வருமானத்தை இழக்கவேண்டி நேரிடலாம். | பிணை ஆவணங்கள் அல்லது பிணைப்பணம் பெறப்பட்டிருத்தல் வேண்டும். | சபையினால் பொதுச்சந்தைகள் ,கடைகள் குத்தகைக்கு வழங்கப்படும் போது குத்தகைத் தொகையில் அரைப்பகுதிப் பணம் முற்பணமாக பெறப்பட்ட பின்னரே ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்றது. மேலும் அரைப்பகுதி ஆறுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஜனவரி தொடக்கம் ஜுன் மாதத்துக்குள் செலுத்தப்பட வேண்டும். குறித்த மாதாந்த தவணையில் செலுத்தப்படாத கட்டணங்களுக்கு 10% தண்டப்பணமும் அறவிடப்படுகின்றது. அத்துடன் 250,000.00 க்குமேற்பட்ட குத்தகைத் தொகைக்கு வைப்புப் பணமாக 25000.00 பெறப்பட்டுள்ளது. மேலும் குத்தகைத் தவணையில் 05மாதங்கள் தொடர்ச்சியாக செலுத்தப்படாத பட்சத்தில் சபையினால் பொறுப்பேற்று வேறுநபருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பாரிய தொகைகள் குத்தகைக்கு வழங்காத காரணத்தால் ஆதனப்பிணை பெறப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (II) குறித்த சில காணிகள் விற்பனை மீது 1 சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் மொத்த பெறுமதி ரூபா 72,228,000 தொகையில் வரியாக ரூபா 722,280 தொகையை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையொன்றின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணி பகிரங்க ஏலவிற்பனை மூலமாகவோ, வேறு வகையிலோ ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர் மூலமாகவோ விற்கப்படுகின்றவிடத்து, விற்பனையாளர் அல்லது அத்தகைய ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர், அத்தகைய காணி விற்பனையின் விற்றுவரவுகளிலிருந்து அத்தகைய விற்றுவரவுத் தொகையின் ஒரு சதவீதத்திற்குச் சமமானவொரு வரியைப் பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டும். எனக்குறிப்பிடப்பட்டுள்ளதால் தவிசாளரின் பதிலை ஏற்றுக் கொள்ளமுடியாது. எனவே இச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய காணி விற்பனை வரியை அறவிட்டிருத்தல் வேண்டும். | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 154 இன் பிரகாரம் பகிரங்க ஏலவிற்பனை இடம்பெறும் போதே பெறு தொகையில் 1% அறவிடலாமென குறிப்பிடப்பட்டுள்ளது. |

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.2.1 <u>பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல்</u>

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபையின் களஞ்சிய அறையில் பல்வேறுபட்ட சொத்துக்கள் மற்றும் இருப்பு பொருட்கள் பாவனைக்கு உகந்த மற்றும் பாவனைக்கு உதவாத பொருட்கள் என பலவகையான பொருட்கள் காணப்படுகின்ற போதிலும், அவற்றை அடையாளப்படுத்தி திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கைகள் | | களஞ்சிய அறையில் காணப்படும் பாவனைக்கு உதவாத பொருட்களை அடையாளப்படுத்தி உரிய முறையைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ)சபைக்குச் சொந்தமான Hand Tractor ஒன்று, land Vehicle மூன்று, Motor lorry ஒன்று, Tractor tailor ஒன்று என்பன திருத்தி பயன்படுத்தக கூடியதாகக் காணப்பட்ட போதிலும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது காணப்படுகிறது. | பாவனைக்குகந்த பொருட்களை திருத்தியும், பாவனைக்குதவாதவற்றை பொருள் கணக்கெடுப்பு மேற்கொண்டு ஏலத்தில் விடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | சபைக்குரிய வாகனங்கள் நிறைய பழுதடைந்த நிலையில் காணப்பட்டிருந்தது. தற்பொழுது சிறிது சிறிதாக திருத்தப்பட்டுக்கொண்டு வருகின்றது. hand tractor, land vehicle,motor lorry, tracor tailorபோன்றவற்றுக்கு இயந்திர பொறியியலாளர் அறிக்கை பெறப்பட்டு திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) Hand tractor ஒன்று மற்றும் Tractor tailor ஒன்று என்பன 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டிலிருந்து பாவனையற்றுக் காணப்பட்டிருந்தும் அதனைப் பதிவழிப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | hand tractor, tractor tailor போன்றவற்றை உரிய நடைமுறையைப் பின்பற்றி 2019 ஆம் ஆண்டு பொருட்கணக்கெடுப்பில் பதிவழிப்பு அல்லது விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

3.3 பெறுகை

-------------

3.3.1 பெறுகைத் திட்டம்

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், சபையினால் ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும்.. | மீளாய்வாண்டிற்கு தனியான ஒரு பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இனிவரும் காலங்களில் பெறுகைத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |

| | | |
|---|---|---|
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்படும் போது கடந்த கால மற்றும் உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ)நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (I) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.<br>(ii)சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |